15/2/2019

மதிப்புக்குரிய சங்கை, போதகர்கள் மற்றும் ஊழியர்கள்,

நன்றிபலி செலுத்துவதற்கும் மற்றும் அவருடைய சமூகத்தில் புதிய பருவம் என்ற ஜெப பேரணிக்கும் ஓர் அழைப்பு

நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் ஒப்பற்ற நாமத்தில் வாழ்த்துக்கள்!

இயேசு 10 குஷ்டரோகிகளை சொஸ்தமாக்கினார் ஆனால் "அவர்களில் ஒருவர்... திரும்பி வந்து,... அவருடைய முகத்திற்கு முன்பாக அவருடைய பாதத்தில் விழுந்து, அவருக்கு நன்றி செலுத்தினார்," (லூக்கா 17:15-16). நாம் அனைவரும் நன்றி என்பதின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்து இருக்கிறோம். அதேபோல், கடந்த 5 வருடங்களாக நாங்கள் வைத்திருக்கிற Solemn Assemblies பதிலாக நாங்கள் எல்லா சபைகளையும் குறிப்பாக கடந்த ஆண்டில் நாமெல்லாருக்கும் தேவன் செய்த நன்மைகளுக்காக நன்றி செலுத்தும் ஜெப பேரணிக்கும் ஓர் அழைப்பு விடுக்கிறோம். ஏப்ரல் 21, 2019 ஞாயிற்றுக்கிழமை உயிர்தெழுதல் நாளோடு (மார்ச் 31- ஏப்ரல் 20, 2019) அன்று நடக்கவிருக்கும் 21 நாட்கள் உபவாச ஜெபத்தின் பங்காக இவை அமைகிறது.

<u>எப்படி இந்த நன்றிபலி மற்றும் ஜெப பேரணி (TPR) நடக்க வேண்டும்?</u>

கடந்த வருடங்களின்படி, நாம் எல்லோரும் வந்து கலந்துக் கொள்ளும்படிக்கு உற்சாகப்படுத்துகிறோம். உங்கள் சபையும் இதில் ஒன்றாக இருக்க...

1. தனிப்பட்ட முறையில் உங்கள் சொந்த அங்கத்தினரோடு (TPR) நடத்துங்கள்
2. மற்ற சில சபையோடுகூட இணைந்து TPR சேர்ந்து நடத்துங்கள்

நன்றி மற்றும் ஜெப பேரணிக்கு பரிந்துரைக்கப்பட்ட பவர்பாயிண்ட் ஜெப விண்ணப்ப வடிவமைப்பை நீங்கள் நம்முடைய இணையத்தளத்திலிருந்து http://agpc.org.my/ பதிவிறக்கம் செய்யலாம். இந்த வருடத்தின் கருப்பொருளானது: அவருடைய சமூகத்தில் புதிய பருவம்.

தேதி: ஏப்ரல் 6, 2019 (சனிக்கிழமை) அல்லது உங்கள் சபை இந்த தேதிக்கு நெருங்கிய தேதியை தேர்ந்தெடுக்கலாம். இது லெண்ட் காலகட்டத்தில், நமக்காக தேவனுடைய விலையேறப்பெற்ற (தியாகம்) பலிக்காக நன்றி செலுத்தும் ஒரு நல்ல நேரமாகவும் இருக்கிறது. இது நம்முடைய 21 நாட்கள் உபவாச ஜெபத்தின் முதல் சனிக்கிழமையாகவும் இருக்கிறது. இந்த வளங்கள் உங்களுடைய பயன்படுத்துலுக்காக இணைக்கப்பட்டுள்ளது.

உங்களுக்கு எந்தவித உதவி தேவைப்பட்டால், உங்கள் மாவட்டங்களில் உள்ள சம்மந்தப்பட்ட எங்கள் ஏஜிபிசி ஒருங்கிணைப்பாளர்களை தொடர்புக் கொள்ளவும். அவர்கள் எல்லா வழியிலும் உங்களுக்கு உதவ தயாராக இருப்பார்கள்.

ஒருங்கிணைப்பாளர்கள்:

| | | | |
|---|---|---|---|
| வடக்கு மாவட்டம் | : | சங்கை மார்குஸ் தான் | 04 658 4404 |
| மத்திய | : | சங்கை எபினேசர் | 012 674 5081 |
| கே.எல் (கிழக்கு) | : | சங்கை ஸ்டீபன் கோங் | 012 398 3835 |
| தெற்கு மாவட்டம் | : | சங்கை தீயோ கெ.கெ. | 012 214 1430 |
| கிழக்கு மலேசியா மாவட்டம் | : | சங்கை ஜோன் லிம் | 016 273 0400 |
| சீன | : | சங்கை ஜானி ஹாய் | 012 933 2790 |
| மலாய் | : | சங்கை எரிக் லீ | 016 415 3351 |
| தமிழ் | : | சங்கை ஆரோக்கியநாதன் | 016 319 1175 |

தேவ சங்க ஜெப ஆணையத்திற்கு நீங்கள் காணிக்கைகளை எடுக்க கருத்தில் வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். நம்முடைய நிகழ்வுகள் மற்றும் நிகழ்ச்சிகள் நடத்த நிதி தேவை அதாவது ஜெப பீடங்கள், ஜெப வழிகாட்டிகள், ஜெப பள்ளிகள், ஜெப வாகனம் ஓட்டுகை ஆகியவை. ஜெபத்தின் மூலம், நம்முடைய தேசத்தில் தேவன் என்ன செய்யப் போகிறார் என்பதற்கு பங்கேற்பாளர்களை விசுவாசத்தில் விதைக்க சவால் பண்ணினீர்கள் என்றால் அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். முன்னதாகவே கொடுத்தீர்கள் என்றால் நாங்கள் பாராட்டுகிறோம்.

ஒரே ஒரு குஷ்டரோகி மாத்திரம் திரும்ப வந்து நன்றி செலுத்துவதை பார்த்த இயேசு, அவர் ' ...மற்ற ஒன்பது பேரும் எங்கே?' என்று கேட்டார். அந்த ஒருவரைப்போல் நினைவில் வைத்து திரும்ப வந்து நன்றி செலுத்தினதுப்போல நாமும் கணக்கிடப்படுகிறோம். ஜுலியஸ் சூபி நமக்கு சொல்வது, மற்ற உத்திகள் (காரியங்கள்) கிடைப்பதற்கு முன்பு, இதுவரை முன்னேற்றம் (திருப்புமுனை) அடைந்ததற்கு… நாம் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். இன்னும் அநேக காரியங்கள் மலேசியா தேசத்தில் செய்ய வேண்டியிருக்கிறது ஆனாலும் ஒரு புதிய வெளிப்பாட்டை பெற்றுக்கொள்ள ஊடுருவி (முறியடித்து) முன் செல்வதற்கு நிகரான நன்றிபலி செலுத்த வேண்டும்.

இப்பொழுது மலேசியாவில் விரிவான திறந்த வாசல் இருக்கிறது. தலைவரால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிற அமைப்பு முறை பெலவீனப்படுத்தப்பட்டிருக்கிறது. இருளின் வல்லமைகளை முறியடித்து செல்வதற்கு இதுவே சபையின் நேரமாயிருக்கிறது. ஆவிக்குரிய ரீதியில் நீங்கள் பெற்றுக்கொண்ட நன்மைகளை எல்லா இடங்களிலும் கொண்டு செல்ல வேண்டும். அதனால்தான் யோசுவா சூரியனை பார்த்து நில் என்று கட்டளையிட முடிந்தது. அதுவே அவர் பெற்றுக்கொண்ட நன்மையை அதிகரிக்கவும் செய்தது.

இந்த நன்றிபலி மற்றும் ஜெப பேரணிக்கும் உள்ள உங்களுடைய திட்டங்களை அவர்களோடு செயல்படுத்தும்படிக்கு உங்கள் மாவட்டம் / மொழி ஒருங்கிணைப்பாளரை அழையுங்கள்.

நம் தேசத்திற்காக ஒன்றாக நம்புவோம்

Connie Chan

சங்கை. கோனி ங்
ஏஜிபிசி ஜெப ஒருங்கிணைப்பாளர்